# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

## S.C. No.479 / 2023

Deposition of witness for PW1

Name : சதீஸ்

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2026.

---

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

நான் ஏ.புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். 24.04.2016ம் தேதி இரவு சுமார் 9.00 முதல் 10.00 மணியளவில் எனது மகளுக்கு டானிக் வாங்குவதற்காக எனது ஊரிலிருந்து இருசக்கரவாகனத்தில் உசிலம்பட்டிக்கு வந்தேன். எனக்கும், மாயன்,பணக்கொடி, வைரப்பாண்டி, மாயன் மகன் சூர்யா ஆகியோர்களுக்கு முன்விரோதம் இருந்தது. காக்குவீரன்பட்டிக்கும், புதுப்பட்டிக்கும் இடையேயுள்ள தர்மலிங்கம் தோட்டத்தின் அருகில் நான் போன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது மேற்படி நான்கு பேர்களும் கிணற்றிக்கு அருகில் என்னை அடித்து சுமார் 60 அடி உள்ள கிணற்றில் தூக்கி போட்டுவிட்டார்கள். அந்த கிணற்றில் தண்ணீர் இருந்ததால் எனக்கு காயம் ஏற்படவில்லை. அந்த கிணற்றிலிருந்து எனது சத்தத்தை கேட்டு அங்கிருந்த தோட்டத்தின் உரிமையாளர் தர்மலிங்கம், பாண்டியம்மாள் ஆகியோர்கள் வந்து பார்த்துவிட்டு, கிணற்றில் படி இல்லாததால் தீயணைப்புத்துறைக்கு தகவல் தெரிவித்தார்கள். அதன்பின்னர் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தை சேர்ந்த போலீசார் அங்கு வந்தார்கள். அதன்பின்னர் தீயணைப்புத்துறையை சேர்ந்தவர்கள் அந்த கிணற்றிலிருந்து என்னை மீட்டனர். அதன்பின்னர் மறுநாள் காலையில் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் ஓட்டி வந்த ஸ்பிளன்டர் இருசக்கர வாகனத்தை சூர்யா திருடி சென்றுவிட்டார். பின்னர் நான் நீதிமன்றத்தின் மூலம் வாங்கி சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான்

கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருக்கும் TN 58 X 3080 Hero Honda splendor plus கருப்பு நிறம் கொண்ட இருசக்கர வாகனம் என்னுடையது தான். அந்த புகைப்படம் அ.சா.ஆ.2.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லையென்று தெரிவித்தார்.)

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.11 06:51:07 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.